//மிகவும் அவசரம் / தனிக்கவனம்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை - 6.

ந.க.எண். 048951 / எம் / இ4 / 2019, நாள்: 10 .02.2021

பொருள்: பள்ளிக்கல்வி - மத்திய அரசின் உதவித்தொகை திட்டம் - தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme) தேர்ச்சி பெற்று இணையதளத்தில் பதிவு செய்யாத மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் புதுப்பித்தல் செய்யும் (Offline Renewal) பணியை முழுமையாக முடித்தல் – சார்பு.

பார்வை: மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் மின்னஞ்சல்.

******

பார்வையில் காணும் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் கடிதத்தின்படி நவம்பர் 2016 ஆம் ஆண்டில் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது 2020-2021 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் இணையதளத்தில் பதிவு செய்யாத மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் (Offline applications) NMMSS கல்வி உதவித்தொகையை தொடர்ச்சியாக பெற்று வழங்குதல் குறித்த அம்மாணவர்களின் பதிவை புதுப்பித்தலுக்கான (Renewal) கருத்துருவை அதுசார்ந்த படிவத்தில் தகுதி உள்ளவர்கள் / இல்லாதவர்கள் என (Eligible / Ineligible) தனித்தனிப் படிவத்தில் மாநில அளவில் தொகுத்து மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 17.02.2021 என்பதால், 15.02.2021 அன்று மாலை 5 மணிக்குள் அனைத்து மாவட்டங்களும் கருத்துருக்களை சமர்ப்பித்து மாணவர்களுக்கு NMMSS கல்வி உதவித் தொகை தடையின்றி பெற்றுப் பலனடைய ஆவன செய்யுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்பணியினை 17.02.2021–க்குள் நிறைவு செய்யவேண்டியுள்ளதால் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் இப்பொருள் மீது தனிக்கவனம் செலுத்தி NMMSS தேர்வில் தேர்ச்சி பெற்ற Offline–ல் விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களின் விவரங்களையும் இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் தனித்தனியாகப் பூர்த்தி செய்து பள்ளிக்கல்வி இயக்கக கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு **15.02.2021 அன்று மாலை 5 மணிக்குள்** அனுப்பி வைத்திட உரிய தொடர்நடவடிக்கை மேற்கொள்ள மீளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இதன் நகலினை துரித அஞ்சலில் இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) என்ற பெயரிட்ட உறையில் அனுப்பி வைத்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

**மின்னஞ்சல் முகவரி :** jdnsed@nic.in , nmmstamilnadustate@gmail.com

இணைப்பு : படிவம் – 1.

பள்ளிக்கல்வி இயக்குநர்
10/02/2021

பெறுநர்:
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

1. அரசு முதன்மைச் செயலாளர்
   பள்ளிக் கல்வித் துறை
   தலைமைச் செயலகம்
   சென்னை - 9 –அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

## படிவம் - 1

| S. No. | Full Name in English (as per NMMSS application) | NMMSS Roll No. | Year of Passing | Gender | Father Name | Category | DOB | District Code | District Name | State Name | School Name | Bank Name | IFSC No. | Branch Name | Account No. | Aadhaar No. | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |